மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP), நாமக்கல்


ஆலம்பாளையம் பேரூராட்சி

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், ஆலாம்பாளையம் பேரூராட்சி, பள்ளிப்பாளையம் கிராமம், சர்வேஎண்-**25/3A1A**-ல அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான மனைகள் அமைப்பு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1:400 (அ) 1"=33'0"

இணையதள விண்ணப்ப எண்: **18RDDCLI (18414 /2023-NKL)**

வ




**குறிப்பு**

(i) மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.66 ஏக்கர் (அ) 6721.00 சதுரமீ

(ii) சாலை மற்றும் மூலை மடக்குகளின் பரப்பு : 2201.28சதுரமீ

(iii) மனைப்பிரிவு எல்லை .....

(iv) உத்தேச சாலை .....

(v) நிலையில் உள்ள சாலை .....

(vi) கோரிய மனைகள் : 39

(vii) ஒதுக்கிய மனைகள் : 37

(viii) பொது ஒதுக்கீடு-
( உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது )

(ix) ஒதுக்கப்படவேண்டிய பூங்காவிற்கான பரப்பு - மனைப்பிரிவின் மொத்தபரப்பு- சாலைகளின் மொத்தப்பரப்பு) X (10 /100)
= (6721.00 - 2201.28) X (10 /100)
= 452.00 **சமீ**

அரசாணை எண் 18-ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019-ன் படி 10% பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பிட்டு தொகையினை மனுதாரரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**பொது ஒதுக்கீடுகள் :**

உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாலை மற்றும் மூலை மடக்குகளின் பரப்பு : 2201.28 சதுரமீ

*TNCD&BR 2019, 47(6)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

ஒப்படைக்கப்பட்ட மின்பகிர்மானம் மனையின் பரப்பு (HANDED OVER TO TANGEDCO) : 45.24 சதுரமீ (1.00%)

ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு மனையின் பரப்பு (HANDED OVER TO LOCAL BODY) : 37.84 சதுரமீ (0.84%)

*சாலைகளின் பரப்பளவு பட்டியல்*

| | | | |
|---|---|---|---|
| 1. 9.00மீ அகலசாலை | 1 - 1 | = | 123.80சமீ |
| 2. 10.00மீ அகலசாலை | 2 - 2 | = | 1129.15சமீ |
| 3. 7.20மீ அகலசாலை | 3 - 3 | = | 364.25சமீ |
| 4. 9.00மீ அகலசாலை | 4 - 4 | = | 368.01சமீ |
| 5. 7.20மீ அகலசாலை | 5 - 5 | = | 204.52சமீ |
| 6. 1.52மீ x 1.52மீ மூலை மடக்கு 10 எண்ணம் | | = | 11.55சமீ |
| | மொத்தப்பரப்பளவு | = | 2201.28சமீ |

மூலை மடக்கு : 12.0மீ சாலை வரை 1.52மீ x 1.52மீ

**III திபந்தனைகள் :**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் தரைபரப்பும் நில அபகித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்எந்தத் தரைக்காகவும் நில ஆரிஜினல் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபடவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண் 18, 16 -ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019 (ம) 31.01.2020-ன் படி விதிகள் அனைத்தும் பொருந்தும்.
3. அரசாணை எண் 181 -ன், ஊரக வளர்ச்சி துறை நாள் 19.12.2020-ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது என சான்றழித்தன பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/துணைபர். ஆல்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வனையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு காட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்புர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில்கிரயப்பத்திரம், தத்தகை பத்திரம்,பட்டா, தாலப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்பதை மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.அதன்மூலம் முதன்மைப்படுத்தப்பட்டதாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் நீர்த்துக்கொள்ளலாம்.இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விற்குவினிறி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 அளவிலான தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகடிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு அமைவும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நிரநிலைகள் அமைவுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT LINE, LT LINE மற்றும் TELIPHONE LINE செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவில் எத்தகைய மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
13. உத்திரவு ஆணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் ம மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

**Approval No:SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.421 / 2023.**

தே. புவனேஸ்வரி
அளவர் /உதவி வரைவாளர்

ச. சுரேந்திரன்
வரைவாளர் நிலை - III

பொ. யமுனாதேவி
மேற்பார்வையாளர்

Signature valid
Signed by: Assistant Director
Location: Namakkal
Date: 27-10-2023 17:13:09

Signature valid
Signed by: Executive Officer
Location: Namakkal
Date: 27-10-2023 17:13:09

உதவி இயக்குநர்.
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.